Registered as a Newspaper

பக்கங்கள் : எட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 12 திங்கட்கிழமை (29.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 333

# புலிகளின் விமானங்களை நாம் விரைவில் சுட்டு வீழ்த்துவோம்!

## பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ஆக்ரோஷம்

கொழும்பு,ஒக்ரோபர்29



விடுதலைப் புலிகளின் விமானங்களை நாம் விரைவில் சுட்டுவீழ்த்துவோம். எமது விமானப் படையினர் புலிகளின் விமானங்களைச் சுட்டுவீழ்த்துவதை நீங்கள் விரைவில் காணத்தான் போகிறீர்கள்.

அனுராதபுரத்தில் இடம்பெற்றது போன்று எந்த ஒரு தாக்குதல் சம்பவத்தையும் இனி முறியடிக்கும் நிலையிலேயே எமது விமானப் படையினர் உள்ளனர்.

இவ்வாறு ஆக்ரோஷத்துடன் தெரிவித்தார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ. ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையில் நேற்று இரவு இடம்பெற்ற நேர்காணலின்போதே அவர் இவ்வாறு சொன்னார்.

அனுராதபுரம் தாக்குதலின் போது துரதிர்ஷ்டவசமாக எமது எதிர்ப்பு விமானம் ஒன்று சூட்டுக்கு இலக்காகியது. வேறு பிரதேசத்திலிருந்து அங்கு செல்வதற்கான இயற்கைக் காலநிலை தடையாக இருந்தது கவலைக்குரியதாகும் - என்றும் அவர் கூறினார்.

தொலைக்காட்சி நேர்காணலின்போது அவர் தெரிவித்தமை வருமாறு:-

அரசு செய்கின்ற நல்லவற்றை எல்லாம் நகைப்புக்கிடமாக்கி பரிகாசிப்பதையே எதிர்க்கட்சிகள் செய்துகொண்டிருக்கின்றன. அவ்வாறான விமர்சனங்கள்தான் அண்மைய அநுராதபுரத் தாக்குதலின்போதும் முன்வைக்கப்பட்டுள்ளன. கூடிய விரைவில் எமது விமானப்படையினர் புலிகளின் விமானங்களை சுட்டுவீழ்த்துவதை நீங்கள் காணத்தான் போகிறீர்கள்.

1977ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி இந்த நாட்டை ஆட்சி செய்தபோது தான் வடக்கு - கிழக்கில் போராட்ட இயக்கங்கள் பல உருவாகின. இதுவே இன்றைய இனப்பிரச்சினைக்கு பிரதான காரணமாக உள்ளது. அன்றைய ஆட்சியாளர்கள் விட்ட தவறுகளின் காரணமாகவே விடுதலைப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை, வரணியில் மோதல் சம்பவங்கள்

கொழும்பு,ஒக். 29

முகமாலையிலுள்ள ஏ-9 பிரதான வீதியில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 4 விடுதலைப் புலி உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அந்தப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்க முற்பட்ட வேளையிலேயே இந்த மோதல் வெடித்தது என்றும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவ ஊழியர்கள் நாளை வேலைநிறுத்தம்

கொழும்பு,ஒக்.29

மேலதிக நேர வேலைக்கான அலவன்ஸ் கொடுப்பனவை வழங்கக் கோரியும் வரவுப் பதிவுக்காக கைவிரல் அடையாளத்தைப் பதியும் முறையை நடைமுறைப்படுத்தாமல் ரத்துச் செய்ய வலியுறுத்தியும் சுகாதார சேவை ஊழியர்கள் நாளை காலை 8 மணி முதல் 12 மணிவரை பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபடவிருக்கின்றனர்.

நாட்டின் 15 பிரதான வைத்தியசாலைகளில் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை நாளை முன்னெடுக்கப்படும் என அகில இலங்கை சுகாதார சேவைகள் யூனியன் தெரிவித்துள்ளது. (சி)

## அரசுக்கு எதிராக ஜே.வி.பி. போராட்டம்

கொழும்பு,ஒக்.29

மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வாழ்க்கைச் செலவுப் பளுவைக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கை உட்பட மூன்று கோரிக்கைகளை முன்வைத்து அரசுக்கு எதிராக எதிர்வரும் வியாழக்கிழமை முதல் ஜே.வி.பி. போராட்டம் நடத்தவுள்ளது.

அனைத்துப் பிரதான நகரங்களிலும் ஆறாம் திகதி வரை இப்போராட்டம் இடம் பெறவுள்ளது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்வர். (அ-1)

# அ'புரத்தில் மொத்தம் 24 வான்கலங்கள் முற்றாக நாசமாகின அல்லது சேதமுற்றன

## கட்டுநாயக்காவையும் விட அதிக இழப்பு

கொழும்பு,ஒக் 29

தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலி அணிகள், 2001 ஜூலையில் கட்டுநாயக்காவில் ஏற்படுத்தியவற்றை விட அதிக அழிவுகளையும் இழப்புகளையும் கடந்த வாரம் அநுராதபுரம் விமானப்படைத்தளம் மீதான தாக்குதலில் ஏற்படுத்தியிருக்கின்றன.

அநுராதபுரம் விமானத்தளத்தில் அச்சமயம் தரித்திருந்த 27 வான்கலங்களில் மூன்றைத் தவிர எஞ்சியவை ஒன்றில் முற்றாக நாசமாக்கப்பட்டிருக்கின்றன அல்லது பகுதியாகச் சேதமாக்கப்பட்டிருக்கின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரபல பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் இத்தகவல்களை வெளியிட்டிருக்கின்றார்.

கட்டுநாயக்கா வான்தளம் மீது 2001 ஜூலை 24ஆம் திகதி கரும்புலிகள் நடத்திய தாக்குதலிலும் இலங்கை விமானப் படை எட்டு விமானங்களை இழந்தது. அநுராதபுரத்திலும் விமானப்படையின் எட்டு வான்கலங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

ஆனால், இரண்டிலும் இவ்வாறு முற்றாக அழிக்கப்பட்ட வான்கலங்களின் வகைகள் வித்தியாசமானவை.

கட்டுநாயக்காத் தாக்குதலின்போது 'ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ்' நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்புகளைக் கழித்து விட்டு இலங்கை விமானப் படைக்கு ஏற்பட்ட

(08ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகள் இன்று செயலிழக்கும்?

கொழும்பு,ஒக்,29

தங்களது சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கோரி அரச பாடசாலைகளின் அதிபர்களும் ஆசிரியர்களும் தொழிற்சங்க நடவடிக்கையாக இன்றும் நாளையும் பணிப் பகிஷ்கரிப்பில் குதிப்பதால் பெரும்பாலான அரச பாடசாலைகள் இன்று முற்றாகச் செயலிழக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்விவகாரத்தை சுமுகமாகத் தீர்ப்பதற்கு அரசுக்கு நீண்ட கால அவகாசம் வழங்கிய பின்னரே இந்த நடவடிக்கையில் தாங்கள் குதித்துள்ளனர் என ஆசிரிய தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

# மூன்று வேவு விமானங்களின் இழப்பு வன்னி மீதான குண்டுவீச்சை பாதிக்கும்

கொழும்பு,ஒக்.29

அநுராதபுரம் விமானத்தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஆளில்லாத வேவு விமானங்கள் மூன்றை விமானப்படை இழந்துள்ளது. இதன் காரணமாக வன்னி மீதான குண்டு வீச்சுக்கள் உடனடியாகப் பாதிக்கப்பட்டுள்ளன. துல்லியமான இலக்குகளைக் கண்டறிந்து தாக்குதல் நடத்த முடியாத நிலை உருவாகி இருக்கிறது.

அநுராதபுர விமானத் தளத் தாக்குதல் தொடர்பாக 'த ஐலண்ட்' பத்திரிகை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்காவின் மிக நவீன உளவு விமானமான 'அவக்ஸ்' விமானத்தில் பயன்படுத்தப்படும் கண்காணிப்பு கருவிகள் பொருத்தப்பட்ட மூன்று 'பீச் கிராப்' ரக விமானங்கள் அநுராதபுரத்தில் அழிக்கப்பட்டுள்ளன.

மிக உயரத்தில் பறந்து நிலைகளைக் கண்டறிந்து இந்த விமானங்கள் வழங்கும் தகவல்களின் அடிப்படையில் விமானங்கள் தாக்குதல் நடத்தி வந்தன.

இவை நிலைகளைக் கண்டறிந்து வானொலித் தகவல்களை குண்டுவீச்சு விமானங்களுக்கு வழங்கும். அதன் அடிப்படையில் விமானங்கள் குண்டுகளை வீசித்தாக்குதல் நடத்தி வந்தன.

இந்தரக விமானம் உயரத்தில் பறப்பதால் விடுதலைப் புலிகளால் தாக்க முடியாது. இந்த விமானத்தின் இழப்பு விமானப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சென்னையில் இன்று பேரணி

சென்னை,ஒக்.29

அநுராதபுர விமானத்தளம் மீது அதிரடித் தாக்குதலைத் தொடுத்து களப்பலியான கரும்புலிகளின் சடலங்களை நிர்வாணமாக்கி பொதுமக்கள் பார்வைக்கு வைத்த இலங்கை இராணுவத்தின் செயலைக் கண்டித்து சென்னையில் இன்று கண்டன ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்படுகிறது.

பெரியார் திராவிடர் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவிருக்கும் இந்த ஆர்ப்பாட்டத்துக்குக்கு அதன் தலைவர் கௌத்தூர் மணி தலைமை வகிக்கிறார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளால் தென்பகுதிகளிலும் களமுனைகளைத் திறக்க முடியும்

## தாக்குதல்களை வழிநடத்திய தளபதி ராம் கூறுகிறார்

கிளிநொச்சி,ஒக்.29

''இலங்கை அரசால் கிழக்கு மற்றும் வடக்கு நோக்கி யுத்த முன்னெடுப்புக்களை மேற்கொள்ள முடியும் என்றால் விடுதலைப் புலிகளால் தென்னிலங்கை நோக்கி களமுனைகளைத் திறக்க முடியும்.''

- இவ்வாறு அம்பாந்தோட்டைத் தாக்குதலை வழிநடத்திய விடுதலைப் புலிகளின் கிழக்குக் கட்டளைத்தளபதி கேணல் ராம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

''இலங்கையின் தென்பகுதியான அம்பாந்தோட்டைப் பகுதியில் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலால் அரசுக்கு பலகோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

யால சரணாலயப் பகுதியில் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களால் சுற்றுலாப் பயணிகள் வருகை முற்றாகத் தடைப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு பலகோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# டோகா விபத்தில் யாழ். குடும்பஸ்தர் மரணம்

டோகா-கட்டாரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் விபத்தில் மரணமானார். யாழ்ப்பாணம் வெள்ளாந் தெருவைச் சேர்ந்த அப்புத்துரை குகானந்தராஜா என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார்.

வீதியால் அவர் சென்றுகொண்டிருந்தவேளை பின்புறமாக வந்த கனரக வாகனம் மோதியதில் காயமடைந்த அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# மரண அறிவித்தல்கள்

## சுந்தரம் சங்கரலிங்கம்



திருநெல்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும், தலங்காவல் பிள்ளையார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் சங்கரலிங்கம் நேற்று (28.10.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பவளத்தின் அன்புக் கணவரும் உமாதேவி (சிறுவர் பாதுகாப்பு - இலங்கை), அருந்ததி(தேசிய சேமிப்பு வங்கி, கொழும்பு), சோபனா, கலியுகவரதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜசிங்கம், துரைராசா, நந்தினி ஆகியோரின் மாமனாரும் சினேகா, சௌமிகா, ஆரபி, மதுசன், கானப்பிரியன், சுருதி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (31.10.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தலங்காவல் பிள்ளையார் கோவிலடி,*
*திருநெல்வேலி மேற்கு.* (67395)
தகவல்: குடும்பத்தினர்

## திருமதி சிவபூஷணி குலசிங்கம்

**(ஓய்வுபெற்ற குடும்ப நலசேவையாளர், உருத்திரபுரம்)**



புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், சக்திபுரம் உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் 47/4, செம்மணி வீதி, நல்லூரில் வசித்துவந்தவருமாகிய திருமதி சிவபூஷணி குலசிங்கம் நேற்று (28.10.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சோமசேகரம்பிள்ளை குலசிங்கத்தின் (ஓய்வுபெற்ற அதிபர், கிளி/சிவநகர் அ.த.க.பா) அன்பு மனைவியும், காலஞ்சென்ற துரைசாமி - ஆச்சிமுத்து தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற சோமசேகரம்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் மருமகளும் நாகபூசணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சுந்தரலிங்கம் (விஷ்ணு ரேடர்ஸ், கொழும்பு), காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் கணேசலிங்கம்(ஜேர்மனி), காலஞ்சென்ற சுபாஸ்கரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நாகரத்தினம்(ஓய்வு பெற்ற தபாலதிபர்), காலஞ்சென்ற ராசம்மா மற்றும் செல்வ நாயகம் (கனடா), எதிர்வீரசிங்கம்(ரூபன்ஸ், யாழ்ப்பாணம்), யோகாம்பிகை, இந்திராணி, மன்மதராசா(யாழினி அழகு மாடம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் திரிவேணி (ஜேர்மனி), திவாகினி(ஜேர்மனி) ஆகியோரின் சிறிய தாயும் கேதாரூபனின் (ஜேர்மனி) அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (31.10.2007) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*47/4, செம்மணி வீதி,*
*நல்லூர்.*
தொ.பே.0779005833 (67396)
தகவல் சோ.குலசிங்கம் (கணவர்)

## திருமதி இரதிதேவி சிவசம்பு (ராதா)



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரதிதேவி சிவசம்பு நேற்று (28.10.2007) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் - மாணிக்கம் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற கந்தையா - காசிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், , சிவசம்புவின் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உதவியாளர் கனியமணல் கூட்டுத்தாபனம், புல்மோட்டை) அன்பு மனைவியும், வாசுகி, கௌசலை (ஆசிரியை புசல்லாவ இந்து தேசிய பாடசாலை), குகேந்திரன் (காசாளர், ஜெயதேவா எரிபொருள் நிரப்பு நிலையம், பரமேஸ்வராச் சந்தி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இரவீந்திரன் (முன்னாள் தபால் அதிபர், மீசாலை), இரஞ்சினி ஆகியோரின் சகோதரியும், சிவநாதன், சுபரஞ்சினி (இராமநாதன் நுண்கலைப்பீடம், நடனத்துறை) ஆகியோரின் மாமியும் கஜீபன், ரஞ்ஜா, ஜனனி ஆகியோரின் பேத்தியும், சாந்தினி, நடராஜா (ஓய்வுபெற்ற நில அளவையாளர்), காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, கைலாயபிள்ளை மற்றும் காமாட்சி வைகுந்தம் ஆகியோரின் மைத்துனியும், ஹேமமாலினி, காந்தீபன் ஆகியோரின் பெரியதாயாரும், சித்திவிநாயகம், கிருபைநாயகி, சிவநாதன், கோகிலநாதன், நித்தியநாயகி, குணநாதன், உதயநாதன் ஆகியோரின் சிறியதாயாரும், கோகிலன், லகன்யா, சுகன்யா, கோபிநாத், புனிதமலர், குணதீசன், நிர்மலா, வனசமாலா, ஸ்ரீசந்திரகாந்தன், சசிகலா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2007) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொற்றாவத்தை மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ரதிவாசம்,*
*மீசாலை கிழக்கு, மீசாலை.*
தொ.பே. 0602214711 (67391)
தகவல்: க.சிவசம்பு (கணவர் - நவரத்தினம்)

# கணபதி படிப்பக 40ஆவது ஆண்டு விழா

உடுப்பிட்டி,ஒக்.29

வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தின் நாற்பதாவது ஆண்டு விழாவையொட்டி எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி சனிக்கிழமை வல்வை மகளிர் வித்தியாலய கலை அரங்கில் தையல் கண்காட்சி நடைபெறவுள்ளது.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு பாலர் தினம் விசேட நிகழ்ச்சியாக நடைபெறும். (155)

# முதுகலைமாணிப் பரீட்சை நவம்பர் 12 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.29

முதுகலைமாணிப் பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் 12 ஆம் திகதி முதல் ஐந்து நாள்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ளன.

சனத்தொகை, அபிவிருத்தி, பிராந்தியத் திட்டமிடல் ஆகிய துறைகளுக்கான முதுகலைமாணிப் பரீட்சைகளே திட்டமிட்டபடி மேற்படி தினங்களில் இடம்பெறவுள்ளன.

ஆய்வுக்கட்டுரைகள் வழங்கும் இறுதி திகதி குறித்து இதுவரை உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லையென பல்கலைக்கழக வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (அ-95)


**சுஜானாஸ் Sujanas**

வெளிநாடுகளிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட ஆண்கள், பெண்கள் மற்றும் சிறார்களுக்கான நவீன டிசைன் ஆடைகளை மொத்தமாக எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**(CORAL) கொறல்**

இல. 92/7, அப்துல் ஹமீட்ஸ் சந்தை, கெய்சர் வீதி, புறக்கோட்டை, கொழும்பு -11

எமது கிளை நிறுவனம்:

**சுஜானாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**

இல. 24A, நவீன சந்தை வெளிப்புறம், யாழ்ப்பாணம்.

குறிப்பு: மாதிரிகளை எமது யாழ்ப்பாணக் கிளையில் பார்வையிட்டு தெரிவு செய்து அதற்குரிய மொத்த ஆடைகளை எமது கொழும்பு விற்பனை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 0773859546, 0212225843 (67392)

**OFFER OFFER OFFER**

| | |
|---|---|
| Monitor 15" | 13000/= |
| Monitor 17" | 16500/= |
| Creative 5.1 | 10900/= |
| Creative(SB5380)2.1 | 4500/= |
| HP Allinone | 15500/= |
| Epson LQ - 300+II Printer | 22500/= |
| 3.0 Processor | 9500/= |
| Dual Cor Processor | 12500/= |
| Mother Board | 6900/= |
| VGA Card | 4300/= |
| Scanner | 8900/= |
| Fax Modem | 875/= |
| Samsung DVD R/W(Sata) | 5400/= |
| Classfiler | 390/= |
| 160 GB Harddisc | 6900/= |
| Key Board | 550/= |
| Multimedia Speaker | 490/= |
| I Pod 1GB Mp4 Player | 7000/= |
| USB Mouse | 400/= |
| Mouse | 250/= |
| Kingston 1 GB USB | 1700/= |
| USB 2 GB | 2700/= |
| Class 1 CD Cover | 25/= |
| Plastic 2 CD Cover | 15/= |

★ Warranty உரிய பொருள்களுக்கு 1 Year முதல் 3 Year வரை Warranty வழங்கப்படும் மற்றும் Power Supply, Optical Mouse, Head Phone, Computer Cable வகைகள் போன்றவற்றை உத்தரவாதத்துடன் நியாய விலையில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்


**MUSIC WORLD**

141B, தபால் பெட்டி சந்தி, திருநெல்வேலி. (சி/54156)


# மரண அறிவித்தல்கள்

## தம்பிமுத்து செல்வராசா (துரை)

**(ஓய்வுபெற்ற தபாலதிபர்)**



கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் குரும்பசிட்டியைப் புகுந்த இடமாகவும் கொண்டு கற்பகப்பிள்ளையார் கோயிலடியில் வசித்து வந்தவரான செல்வராசா நேற்று (28.10.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் இராசதுரை, காலஞ்சென்ற அருனேசுராணி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இராசரத்தினம் - அன்னபூரணி தம்பதியரின் அன்பு மருமகனும் அமிர்தராணியின் அன்புக் கணவரும் தர்சினி (பிரான்ஸ்), சுதர்சினி (பிரான்ஸ்), அஜந்தினி, கோகுலன், நிலாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவனேசன் (பிரான்ஸ்), சுகிர்தன் (பிரான்ஸ்), திவாகரன் (எவரஸ்ட் சூபலஸ் உரிமையாளர், சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனும் சத்தியமூர்த்தி (கனடா), சிவமூர்த்தி, புஸ்பராணி (கொழும்பு), விக்கினேஸ்வரமூர்த்தி (கனடா), ஜெயராணி (இந்தியா), பவளராணி (கனடா), தர்மராணி ஆகியோரின் மைத்துனரும் கோபிகனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2007) திங்கட்கிழமை மு.ப.11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கற்பகப்பிள்ளையார் கோயிலடி,*
*உடுவில் கிழக்கு.*
தொ.பே.: 0779179931. (67390)
தகவல்: குடும்பத்தினர்.

## நடராசா பாலசுப்பிரமணியம் (வெள்ளை)



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பாலசுப்பிரமணியம் (வெள்ளை) 27.10.2007 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காங்கேசன்துறை நடராசா - காலஞ்சென்ற நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், சிவபாக்கியத்தின் கணவரும், சுவாஸ்கரன், சிவாஸ்கரன், புனிதகரன் (றோஸ), றோஸ்மலர், கிளின்டன் ஆகியோரின் தந்தையும் சரோஜினிதேவி, வள்ளிநாயகி (அவ்வை), செல்வராசா (பாலையா - ஈஸ்வரபவான் கம்பனி), சிவராசா (டட்டா), காலம் சென்ற யோகராசா (ராசன்) மற்றும் விஜயகுமார் (குமார்) ஆகியோரின் சகோதரரும், யேசுதாசன், அமிர்தராசா (சிற்றூர்திகள் சங்கத் தலைவர், 769), புஸ்பராணி, ரூபி, வதனி ஆகியோரின் மைத்துனரும் தயாளினியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2007) திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அளவெட்டி வடக்கு.*
தகவல்: சுபாஸ்கரன் (கனடா), சிவாஸ்கரன் (லண்டன்) (மகன்மார்)

## முருகேசு செல்லையா

**(முன்னாள் கணக்காளர் துறைமுக அதிகாரசபை)**

தொல்புரம் மேற்கை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்லையா நேற்றுமுன்தினம் (27.10.2007) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னத்தங்கம் தம்பதியினரின் அருமை மகனும், வேலுப்பிள்ளை - முத்தாச்சி தம்பதியினரின் மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும், ரஞ்சனி (ஆஸ்திரேலியா), மாலினி (கனடா), ரவீந்திரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜீவித் மோகன் (ஆஸ்திரேலியா), ராஜசந்திரகுமார் (கனடா), பாலவதனா (ஆசிரியர், கொழும்பு இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், கவிதாஜினி, சாலினி, றொசாந்தன், சனாத் ஆகியோரின் அன்பு பேரனும் திருமதி நடராசா கனகம்மாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(29.10.2007) திங்கட்கிழமை பி.ப. 4 மணியளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*NO. 70A, FUSSELS LANE,*
*COLOMBO - 06.* (67386)
தகவல்: க. தெட்சணாமூர்த்தி (தமயன், தொல்புரம்)

## சரவணமுத்து சேதுகாவலம்பிள்ளை (J.P)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கீரிமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சேதுகாவலம்பிள்ளை (ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டரும் கைவிரல் அடையாள நிபுணரும்) நேற்று (28.10.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் தயானந்தசிவம், அருள்மொழிதாஸ், அம்பிகா ஆகியோரின் தந்தையும் பத்மினி, பிரியதர்சினி, காலஞ்சென்ற குகநேசன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(29.10.2007) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பேக்கரி ஒழுங்கை, சண்டிலிப்பாயிலுள்ள தற்போதைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பேக்கரி ஒழுங்கை,*
*சண்டிலிப்பாய்.* (சி/54155)
தகவல்: த. அம்பிகா (மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பணம் புனித பத்திரிசியார் கல்லூராரியின் 2007 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, கல்லூரி முதல்வர் அருட்திரு ஜெஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.
முன்னதாக விருந்தினர்கள் பான்ட் வாத்திய சகிதம் விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டதை அடுத்து யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் மங்கல விளக்கேற்றி நிகழ்வைத் தொடக்கி வைத்தார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (படங்கள்: லக்ஷிமன்)

## உரும்பிராயில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு என மக்கள் விசனம்

யாழ்ப்பாணம். ஒக்.29

உரும்பிராய் கிழக்குப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் மிகத் தீவிரமாக இடம்பெற்றுவருவதாக அப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

நாளாந்தம் இரவு பகல் எனப் பாராது நடைபெறும் இச் செயலால் அப்பகுதி மக்களும், மாணவர்களும் பெரிதும் அவலப்பட வேண்டி இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் இரவு வேளைகளில் மது போதையில் தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பாவிக்கும் மேற்படிக் கும்பல் தட்டிக் கேட்போரைத் தாக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் கவனமெடுத்து இதனைக் கட்டுப்படுத்தி, மாணவர்களின் கல்விக்கும், மக்களின் வாழ்க்கைக்கும் உதவவேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (203-288)

## மரநாய்களால் நவாலியில் தொல்லை

நவாலி, ஒக்.29

நவாலியில் மரநாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இவை நள்ளிரவு வேளையில் கோழிகளைப் பிடித்துச் செல்வதால் மக்களுக்கு பல நஷ்டங்கள் ஏற்பட்டு வருவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் நவாலி சின்னப்பா வீதியிலுள்ள கோழிக்கூடொன்றுக்குள் நுழைந்த மரநாயொன்று சில கோழிகளைச் சாப்பிட்டு விட்டு வெளியே வர முடியாமல் நின்ற வேளையில் அது அடித்துக் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (203-100)

## சமூக சேவை அலுவலர்களுக்கு பெங்களூரில் பயிற்சி நெறி.

யாழ்ப்பாணம், ஒக்.29

ஹன்டிக் கிறாவ் இன்ரநஷனல் நிறுவனத்தின் அனுசரணையுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்கள் உட்பட 15 பேர் வலுவிழந்தோர் தொடர்பான கல்விப் பரிவர்த்தனைப் பயிற்சி நெறிக்காக அண்மையில் பெங்களூர் சென்று வந்துள்ளனர்.

கிழக்கு மாகாண சமூக திணைக்களப் பணிப்பாளர் திருமதி. க.முரளிதரன் தலைமையில் மேற்படி குழுவினர் அங்கு சென்றிருந்தனர்.

இப்பயிற்சியின் பலனாக யாழ். மாவட்டத்தில் 20 வலுவிழந்தவர்களுக்கு வேலை வாய்ப்பும் மற்றும் 10 வலுவிழந்தவர்களுக்குப் பிரதேச செயலக ரீதியாக வலுவாக்கும் திட்டமும் எதிர்வரும் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாக பயிற்சி நெறியில் கலந்து கொண்ட யாழ்ப்பாண மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் க.கிருபாகரன் தெரிவித்தார். (203-288)

## காளான் கறி சாப்பிட்ட இருவர் சுகயீனமுற்றனர்

யாழ்ப்பாணம். ஒக்.29

காளான் கறி சாப்பிட்ட தாயும், மகளும் திடீர் சுகயீனமுற்றனர். இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை மீசாலை வடக்கில் இடம் பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த பொன்னையா பவானி (வயது 45), இவரது மகளான பொன்னையா குணாநிதி (வயது 24) ஆகியோர் சுகயீனமுற்ற நிலையில் சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (203-207)

# கைதடி ஊற்றல் மயானத்தில் சடலங்களை எரிக்க கொட்டகை இல்லை

## மழை காலங்களில் மக்கள் பெரும் கஷ்டம்

யாழ்ப்பாணம், ஒக். 29

கைதடியிலுள்ள ஊற்றல் மயானத்தில் மாரி காலங்களில் சடலங்களைத் தகனம் செய்வதில் இப்பிரதேச மக்கள் பெரும் கஷ்டங்களைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த மயானத்தில் மழை காலத்தில் சடலங்கள் நனையாதவாறு எரியூட்டுவதற்கு இதுவரை கொட்டகை அமைத்துத் தரப்படவில்லை.

இது சம்பந்தமாகப் பல தடவைகள் உரியவர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதும் அதனை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அப்பகுதி மக்களால் குறை கூறப்பட்டுள்ளது.

இதேவேளை உலக உணவுத்திட்டத்தின்கீழ் பிரதேச சபையினால் மயானத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளும் பலனைத்தரவில்லை எனவும் பலராலும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று கிராம சேவைகள் பிரிவுக்குட்பட்ட மக்கள் பயன்படுத்தும் இந்த மயானம் இவ்வாறு சீரற்ற நிலையில் இருப்பது தமக்கு வேதனை அளிப்பதாகவும் அப்பிரதேசவாசிகள் கூறுகின்றனர்.

எனவே இந்த விடயத்தில் உரியவர்கள் உடனடி நடவடிக்கை எடுத்து, கொட்டகை அமைத்துத் தரவேண்டும் எனவும் அத்துடன் இந்த மயானத்தின் சுற்று வேலியையும் புதிதாக அமைத்துத் தரவேண்டும் என கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. (203-288)

# பிரதேசசபை, நகரசபைகளுக்கு மாகாண நன்கொடை நிதி

யாழ்ப்பாணம், ஒக். 29

குறித்தொதுக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டுக்கான மாகாண நன்கொடைநிதி யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச சபை, நகர சபை என்பவற்றிற்கு வழங்கப்படவுள்ளன.

பிரதேசசபை, நகரசபை என்பனவற்றை 80 லட்சம் ரூபாவுக்கான முன்மொழிவு பத்திரங்களை மேற்படி திட்டத்திற்கு உடன் அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

வீதி அபிவிருத்தி, கிராமிய சந்தை அபிவிருத்தி, கிராமிய மின்விநியோகம், சமூக அபிவிருத்தி ஆகிய 4 தலைப்புகளின் கீழ் முன்மொழிவுகளை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களை விட 2008ஆம் ஆண்டில் இந்நிதிக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படவுள்ளதாக சபை திட்டமிடல் பிரிவு தெரிவித்துள்ளது. (203-95)

## மக்கள் வங்கியின் அனுசரணையுடன்

# வடமராட்சி கல்வி வலயம் நடத்தவுள்ள சாதனையாளர் கௌரவிப்பும் பரிசில் வழங்கலும்

யாழ்ப்பாணம், ஒக். 29

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் வடமராட்சி கல்வி வலயம் நடத்தும் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் மக்கள் வங்கியின் சேமிப்பு முகாம் பரிசில் வழங்கல் நிகழ்வும் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் வட.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் க.ஆனந்தராஜா பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் 2006 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ உயர்தரம், ஜி.சீ.ஈ சாதாரணதரம், 2007 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் பாடசாலைகளில் விசேட செயற்பாடுகளில் சாதனை படைத்த மாணவர்கள் ஆகியோருக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. அன்றையதினம் மக்கள் வங்கியின் மாணவர் மலர்ச்சி சிசுஉதான சேமிப்பு முகாம் செயற்படவுள்ளது.

மாணவர்களின் சாதனைகளை ஊக்குவிக்கும் இச்சேமிப்புத் திட்டத்தில் இணைய விரும்பும் மாணவர்கள் இங்கு புதிய கணக்குகளை ஆரம்பிக்க முடியும். அத்துடன் கணக்குகள் உள்ள மாணவர்கள் வைப்புக்களை மேற்கொள்ளலாம்.

பெற்றோர், ஆசிரியர் மற்றும் ஏனையோரும் தமக்குரிய, தமது பிள்ளைகளுக்குரிய சேமிப்புக் கணக்குகளை இங்கு வைத்து ஆரம்பிப்பதற்காக வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் ஏ.ரி.எம். இலத்திரனியல் அட்டைகளுக்கான விண்ணப்பங்களும் வழங்கப்படவுள்ளன. மாணவர் மலர்ச்சிக் கணக்குகளில் உள்ள மீதிக்கேற்ப பாடசாலைப் பைகள், அகராதிகள், கல்குலேற்றார்கள் போன்ற பொருள்கள் பரிசில்களாக வழங்கப்படவுள்ளன.

இதேவேளை - வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் ஆதரவில் அன்றைய தினம் மாணவர்களுக்கான இலவச மருத்துவ முகாம் ஒன்றும் நடத்தப்படவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (203)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.29

அல்லாரை அபிராமி பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் முதலாம் திகதி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையப் பெற்றோர் ஆசிரியர்கள் சங்கத் தலைவர் ச.சந்திரராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதனும், சிறப்பு விருந்தினர்களாகச் சர்வோதய நிறுவன யாழ். மாவட்ட இணைப்பாளர் அ.சி.சிவசுப்பிரமணியம், தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் க.உமாபாலன் ஆகியோரும் கலந்து கொள்வர். (203-207)

* * *

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் தரம்11,12,13 ஆகிய வகுப்புகளில் தமிழ் மொழியும் இலக்கியமும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளையும், நாளை மறுதினமும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் துறைசார் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் விரிவுரைகள் நடத்தப்படவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-207)

## ஒன்றுகூடி மகிழல் நிகழ்வு

யாழ்ப்பாணம். ஒக்.29

கோப்பாய் - நல்லூர் கல்விக் கோட்டப் பணிப்பாளர் கே.வி.குணசேகரத்தின் ஒன்று கூடி மகிழல் நிகழ்வு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கே.வி.குணசேகரத்தினால் எழுதப்பட்ட பகவத்கீதைக் கதைகளுக்கான விமர்சனத்தை கோப்பாய் கல்விக் கோட்ட ஆசிரிய ஆலோசகர் திருமதி பாலசிங்கம் நிகழ்த்தினார். திருக்குறள் கதைகளுக்கான விமர்சனத்தை இரா.செல்வடிவேல் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வின் போது கே.வி.குணசேகரம் எழுதிய கந்தர் சஷ்டி கவசம் உரையுடன் கூடிய நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

"கந்தர் சஷ்டி கவசம்" இலவச நூலை வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வெளியிட்டு வைத்தார்.

இதன் முதற்பிரதியை யாழ்.இந்துக் கல்லூரியின் இளைப்பாறிய முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் பெற்றுக் கொண்டார். (203-51-68)

## மழை நீர் தேங்குவதால் மாணவர் சிரமம்

வலி வடக்கு. ஒக்.29

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் தேங்கும் நீரினால் கல்லூரி மாணவர்கள் முதல் பாதசாரிகள் வரை போக்குவரத்துச் செய்வதில் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கல்லூரியின் தெற்குப்புறமாகச் செல்லும் வீதியே இத்தைகைய அவலமான நிலைமையில் காணப்படுகின்றது.

மழை காலத்தில் பெரும் வெள்ளமாக நீர் தேங்கி நிற்பதனால் சப்பாத்துடன் வரும் மாணவர்கள் குறிப்பிட்ட வீதியில் செல்ல முடியாது அருகில் உள்ள கட்டடத்தில் ஏறிச் செல்லும் நிலைமை காணப்படுகிறது.

இதற்குரிய நடவடிக்கைகளை உரியவர்கள் விரைவில் மேற்கொள்ள வேண்டுமென்று பாதிக்கப்பட்டோர் கேட்டுள்ளனர். (203 -68)

## வேம்பிராயில் காணிகளில் சட்டவிரோத மண் அகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.29

மீசாலை வடக்கு வேம்பிராய் மயானத்திற்கு அருகில் உள்ள அரச காணியில் சட்ட விரோத மண் அகழ்வு இடம் பெறுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஆலய வீதி அமைப்பதற்கென கூறி வாகனங்களில் தினமும் மண் ஏற்றிச் செல்வதாகவும், அத்துடன் அப்பகுதியில் உள்ள தோட்ட நிலங்களிலும் மண் அகழ்வு இடம் பெறுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (203-207)

## சமுர்த்திப் பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொருள்கள்

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறும் ஆயிரத்தி எழுநூற்றி ஐம்பது குடும்பங்களுக்கு கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தினால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி நிவாரணம் பெறும் அங்கத்தவர்கள் கூடுதலாக உள்ள குறைந்த பெறுமதியான சமுர்த்தி முத்திரை வைத்துள்ள, உழைப்பாளர்களை இழந்த மற்றும் உழைக்க முடியாதவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டுள்ளதாக கரித்தாஸ் - கியூடெக் நிறுவனப் பிரதிநிதிகள் தெரித்தார்கள்.

உடுவில் பிரதேச செயலாளர் விடுத்த கோரிக்கையின் பெயரில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யா/புன்னாலைக்கட்டுவன் ம.வி.
அதிபர் ந.குணரத்தினம்
அவர்களின் அன்புத் தந்தை

### இராசசிங்கம் நடராசா

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரது குடும்பத்தினரிற்கு தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோட்டக் கல்விப் பணிப்பாளரும் அதிபர்களும்,
உடுவில் கல்விக் கோட்டம்.

(67388)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மனம்மகிழ 1948.10.09
மனம் நெகிழ 2004.10.31

அமரர்

### இராசையா ஐயர் நடன சபாபதிசர்மா


(காளி கோயில் பூசகர்)

திதி: சங்கடஹர சதுர்த்தி (29.10.2007)

ஆண்டுகள் மூன்றென்ன நகர்ந்தாலும் - எம்
அன்பு மனங்களில் உங்கள் இனிய நினைவுகள் என்றும்
அழியாது அப்பா உங்கள் உருவம்
என்றுமே மறையவே மறையாது.

ந. சிறிதர சர்மா (மகன்)
வட்டாக்காய் அம்மன் கோயிலடி,
கந்தரோடை, சுன்னாகம். (67305)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கந்தையா வேந்திரமூர்த்தி

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ரெலிக்கோம்)
திகதி:-29.10.2007

மலர்வு 27.07.1938
உதிர்வு 21.10.2005

அன்போடும் பாசத்தோடும்
எம்மோடு இணைந்து பண்புடன் வாழ்ந்த எம்
இனிய அப்பாவே! நீங்கள்
எம்மை விட்டு மறைந்து இரண்டு ஆண்டு
ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ எம்துயரம் அப்பா!
உயிர் உள்ளவரை ஆறாது எம் துயரம்
நீங்காத உங்கள் நினைவுகள்.

24, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (66381)
தங்கள் நினைவில் வாழும் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி முத்தையா தங்கரத்தினம்



சண்டிலிப்பாய் வடக்கு மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தையா தங்கரத்தினம் அவர்கள் 28.10.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்பலம் - தங்கம்மா தம்பதியினரின் புதல்வியும், செல்லத்துரை முத்தையாவின் [illegible]னைவியும், பவானி, இன்பவதனி (அமரர் [illegible]ரியர், இளவாலை றோ.க.த.பாடசாலை), தவேந்திரன் (ஆசிரியர், மடு கல்விவலயம் - மன்னார்) ஆகியோரின் அன்பு தயாரும், அமரர் துரைராசா (ஓய்வுபெற்ற ஓவசியர் - சுழிபுரம்), சோதிவேல் (கல்வியங்காடு), இலகுநாதன் (கனடா) ஆகியோரின் சகோதரியும், ஞானகுருநாதனின் (ஞானம்) மாமியும், சிவா[illegible]சன் (யா/மகாஜனா கல்லூரி, தரம் 11), கீர்த்திகா (யா/மகாஜனா கல்லூரி, தரம் 9), பிறேமிகா (யா/மகாஜனா கல்லூரி, தரம் [illegible]) பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (29.10.2007) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டுப்பனை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். தகவல்:

மு.தவேந்திரன் (மகன்)
(ஆசிரியர், மடு கல்வி வலயம்)
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய் வடக்கு. (67382)

### நாகேந்திரர் அமிர்தரத்தினராசா

(ஓய்வு பெற்ற அதிபர்)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் மன்னார், திருக்கேதீஸ்வரத்தை வசிப்பிடமாகவும் தற்போது கனடா, ஸ்காபறோவில் வசித்தவருமான நாகேந்திரர் அமிர்தரத்தினராசா 25.10.2007 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் நெடுந்தீவு கிராமசபை முன்னாள் தலைவர், காலஞ்சென்றவர்களான நாகேந்திரர்-செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், இராசயோகன், பொன்னம்பலம், காலஞ்சென்ற நாகேந்திரர் மற்றும் இராமநாதன், கோகிலலட்சுமி (ஆனந்தி), றோமவாஹினி, முருகதாசன், கேசவவர்மா, சாண்டில்யவாணி, கண்ணன், ஹேமவாஹினி, அமிர்தவேணி, உமாமகேசனா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.10.2007) திங்கட்கிழமை கனடா, ஸ்காபறோவில் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்:

T.P - கனடா
647 241 9504
416 889 2959 (சி/54118)

மனைவி, மக்கள், மருமக்கள்
நா. இலட்சுமணராசா (சகோதரன்)
30/1, வைமன் றோட், நல்லூர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும்

### செல்வன் சந்திரபாகு தனுஷன்

2007 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 177 புள்ளிகளைப் பெற்று பாடசாலயில் முதலாம் இடத்தைப் பெற்று உயர்சித்தியடைந்துள்ளார். மேலும் அவர் சித்தியடைவதற்கு உறுதுணையாக இருந்த அப்பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், பெற்றோரிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர் மேலும் உயர்சித்திகளைப்பெற வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
அப்பப்பா, அப்பம்மா, அத்தை குடும்பம், அன்புச் சித்தப்பா குடும்பம் மற்றும் சித்தப்பாமார்கள்.
திருநாவற்குளம்,
வவுனியா. (சி/54154)

## தவறிவிட்டது

திருநெல்வேலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் சண்முகநாதசர்மா, லோகேந்திர சர்மா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (752683506 V), விசேட அடையாள அட்டை (0902022434) என்பன தவறிவிட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 74/1, பலாலி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (67383)

## தவறிவிட்டது

நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி பாலச்சந்திரன் என்பவரது தே.அ.அ.இல.(695841620V), வி.அ.அ.இல.( 0902012183) நீதிமன்ற தொழில் அ.அ. என்பன 26.10.2007 அன்று யாழ்.நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (67387)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர்இறைச்சிக்கோழிகள்மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்யப்பட்டது 1கிலோ 550/= மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு கழிவு வழங்கப்படும்.
தொடர்பு:- விஜயகுமார் குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை. (67385)

## கோழிக் குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறோயிலர் குஞ்சுகள் விற்பனைக் குண்டு.

- றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி.
- கோல்டன்பாம் - பருத்தித்துறை.
- P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை,
T.P.No:- 222 3529, 222 2867 (67384)

## தாங்கியில் வெடிப்பு; மண்ணெண்ணை விநியோகம் தடை

யாழ்ப்பாணம்,ஒக்.29


யாழ்.நகரில் அமைந்துள்ள மாக்பெட் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக மண்ணெண்ணை விநியோகம் நடைபெறவில்லை என பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இங்கு மண்ணெண்ணை சேகரிக்கும் தாங்கியில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதனால் மண்ணெண்ணையைச் சேகரித்து வைக்க முடியாததன் காரணமாகவே மண்ணெண்ணை விநியோகம் இடம் பெறவில்லை என அதன் உரிமையாளர்களால் கூறப்பட்டது. (203-51)

## வலு விழந்தோருக்கு தொழில் வாய்ப்பு

யாழ்.மாவட்டத்திலுள்ள வலுவிழந்தோரில் தொழில் செய்யக்கூடியவர்கள் அல்லது தொழில் பயிற்சியினைப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றவர்கள் தமது சுய விவரங்களைத் தத்தமது பிரதேச சமூக சேவை உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பதிவுசெய்துகொள்ளுமாறு மாவட்ட சமூக சேவை அலுவலர் க.கிருபாகரன் அறிவித்துள்ளார். (203-288)

## அப்பாவுக்காக ஆராதிப்போம்



மலர்வு 13 . 11 . 1927
உதிர்வு 02 . 10 . 2007

### ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்

தேர் ஊரும் கருணாகரனைப் பணிந்து
பார் போற்றும் வழி வாழ்ந்து
ஊர் போற்றும்படி நடந்து
பேர் துலங்க உரும்பைப்பதி வாழ்ந்தீர் அப்பா!

பண்டிதமணியின் பண்பான சீடனாய்
பஞ்சாட்சரம் எனும் பெயர்பூண்டு
பட்டங்கள் பல பெற்று
பதவிகள் பலவகித்து
பதி உயரப் பாடுபட்டுழைத்து
பண்பினிலே சிறப்புற்று
பாசத்தின் உறைவிடமாகி
பரமனடி சேர்ந்துவிட்ட
தமிழ்த்தாயின் தவப்புதல்வரே அப்பா!
என்றென்றும் எங்களது இதயத்திலே இருத்தி
ஆண்டாண்டு தோறும் ஆராதனை செய்வோம்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (67359)
அருமை மகள் வாசுகி.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

928 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கும்பம் 08 24 31 40

26-10-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5267993 - 5282554

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 315,769 | 10/- | 3,157,690/- |
| 2 இலக்கங்கள் | 29,111 | 20/- | 582,220/- |
| 1 இல. + லக்கினம் | 28,663 | 30/- | 859,890/- |
| 2 இல. + லக்கினம் | 2,662 | 100/- | 266,200/- |
| 3 இலக்கங்கள் | 766 | 500/- | 383,000/- |
| 3 இல. + லக்கினம் | 74 | 5,000/- | 370,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,019,000/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 377,054 | | 7,042,500/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,705,400/-

தொடர் இல.4392631 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 ஒக்டோபர் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 5273986-1-57 |
| பொலன்னறுவை | 5268560-5-22 |
| புத்தளம் | 5269981-7-42 |
| மாத்தறை | 5269510-7-45 |
| கேகாலை | 5274592-8-98 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


உ
சிவமயம்

## சிவாச்சார்யாபிஷேக சுபமுகூர்த்தம்

அன்புடையீர்!

சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் துணைகொண்டு ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான சர்வசித்து வருஷம் ஐப்பசித் திங்கள் 14 ஆம் நாள் (31.10.2007) புதன்கிழமை ஷஸ்டி திதியும், திருவாதிரை நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய 9.30 மணிமுதல் 11.30 மணிவரையுள்ள தனுலக்கின சுபமுகூர்த்தத்தில்

தையிட்டி, சிவசாமிக்குருக்கள் - இராஜம்மா அவர்களின் புத்திரன்

### பிரம்மஸ்ரீ பாலபாஸ்கரசர்மாவிற்கு

திருவருள் துணை கொண்டு விஷேச தீட்சை, நிர்வாண தீட்சை, சிவாச்சார்யாபிஷேகம் நடத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும், தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தீட்சாகுரு:- "சிவஞானபாஸ்கரன்" தா. மகாதேவாக்குருக்கள்
("காயத்ரி பீடம்", இணுவில்)

சிவப்பிரம்மஸ்ரீ சொ.இரத்தினசபாபதிக்குருக்கள்
சம்பூர்ணவல்லி தம்பதியினர்.
திருமதி சி.இராஜம்மா.

சந்திரசேகரப் பிள்ளையார் கோயில்,
ஐயனார் கோயிலடி,
சுன்னாகம். (67314)

தங்கள் நல்வரவை விரும்பும்
பிரம்மஸ்ரீ சி.பாலபாஸ்கரசர்மா கோமளா தம்பதியினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









சர்வதேச லயன்ஸ் கழக இலங்கைக் கிளையின் பொன்விழா நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றன.

வட மாகாண லயன்ஸ் கழகங்கள் (மாவட்டம்- 306 பி1) ஒன்றிணைந்து இந்தப் பொன்விழாவைக் கொண்டாடின.

இந்தப் பொன் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்டம் 306 பி1 இன் ஆளுநர் லயன் எஸ்.ராகவன் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், லயன்ஸ் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினரான லயன் பேராசிரியர் கே.பால சுப்பிரமணியம் ஆளுநரால் கௌரவிக்கப்படுவதை இரண்டாவது படத்திலும், நிகழ்வுகளில் கலந்து கொண்ட லயன்ஸ் கழக உறுப்பினர்கள், லியோ கழக மாணவிகள் ஆகியோரை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். (படங்கள்: நேசன்)

# லயன்ஸ் கழக பொன்விழா நிகழ்வுகள் நேற்றுக் கோலாகலமாக இடம்பெற்றன

யாழ்ப்பாணம்,ஒக். 29

சர்வதேச லயன்ஸ் கழக இலங்கைக் கிளையின் பொன்விழா நிகழ்வுகள் நேற்று யாழ்.இந்துக்கல்லூரியில் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள புற்று நோயாளர்களுக்கு சத்துணவுப் பொருள்களை வழங்கிப் பொன்விழா நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.ராகவன் உட்பட தென்னிலங்கையில் இருந்து வருகைதந்த மாவட்டம் 306 பியின் செயலாளர் லயன் கனிஸ்ரன் ஜெயதிலக, பொருளாளர் லயன் ஜெயவர்த்தனா, உதவிச் செயலாளர் பிரியந்த பெர்ணான்டோ, தலைமைத்துவ அபிவிருத்தியாளர் லயன் இக்னேசியஸ் கமிலஸ், அங்கத்தவர்களின் காப்பாளரான லயன் லக்ஸ்மன் விஜயசிங்க ஆகியோர் உட்பட மாவட்ட லயன்ஸ் கழகங்களின் உறுப்பினர்கள் யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து மாணவிகளின் பான்ட் வாத்திய இசை முழங்க கஸ்தூரியார் வீதி வழியாக ஊர்வலமாக யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து நிகழ்வுகள் ஆளுநர் சபையின் பிரதிச் செயலாளர் வைத்திய கலாநிதி லயன் வி.தியாகராசா தலைமயில் நடைபெற்றன.

மங்கள விளக்கை பிரதம விருந்தினர் உட்பட விருந்தினர்கள் ஏற்றி வைத்தனர்.

வாழ்த்துரையை யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா நிகழ்த்தினார். நீரிழிவு பற்றிய சிறப்புரையை வாழ்நாள் பேராசிரியர் கே.பாலசுப்பிரமணியம் நிகழ்த்தினார்.

வர்த்தக வங்கி முகாமையாளர் லயன் எஸ்.ரவீந்திரா அறிமுகவுரையையும் லயன் வி.ஆர்.ரஞ்சன் வரவேற்புரையையும் நிகழ்த்தினார்கள்.

இந்த வைபவத்தில் புற்று நோயால் பாதிக்கப்பட்ட நூற்றி இருபது பேருக்கு சத்துணவும் பணமும் உதவியாக வழங்கப்பட்டன.

லியோ கழக உறுப்பினர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. கலாசார நிகழ்வுகளான நடனம், மேலைத்தேய, கர்நாடக இசைக்கச்சேரி என்பனவும் இடம்பெற்றன. (50-68)

## வறுமை மற்றும் அபிவிருத்தி பற்றி அனலைதீவில் ஆய்வு

யாழ்ப்பாணம், ஒக்.29

வறுமை, பிரதேச அபிவிருத்தி தொடர்பாக யாழ். பல்கலைக்கழக முதுகலைமாணி மாணவர்கள் அனலைதீவில் ஆய்வு செய்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகப் பொருளியல் துறை தலைவர் பேராசிரியர் வி.பி. சிவநாதன் தலைமையில் அனலைதீவு சென்ற மாணவர்களே இவ்வாறு ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அனலைதீவு ஆய்வுக்குச் சென்ற 30 மாணவர்களுக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலர் து. ஸ்ரீமோகன் படகு போக்குவரத்து மற்றும் உணவு வசதிகளையும் பிற உதவிகளையும் வழங்கியுள்ளார். (203-95)

# அரசின் யுத்தமுன்னெடுப்புகள் தெற்கைநோக்கி பரவி வருகின்றன

## தேசிய சமாதானப் பேரவை கவலை

கொழும்பு,ஒக்.29

இலங்கை அரசாங்கத்தின் யுத்த முன்னெடுப்புகள் தென்னிலங்கை நோக்கி பரவிவருகின்றன என்று தேசிய சமாதானப் பேரவை கவலை வெளியிட்டிருக்கிறது.

அநுராதபுரம் விமானத்தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

கிழக்கில் சிறிலங்கா அரசாங்கம் ஈட்டியதாகக் கூறப்படும் வெற்றிகள் ஒருபுறம். வடக்கில் யுத்த முன்னெடுப்புகளைத் தீவிரமடைய வைத்து, மறுபுறம் தெற்கை நோக்கி யுத்தத்தை நகர்த்தத் தொடங்கியிருக்கிறது அரசு

இது, கடந்த கால வரலாற்றின் மீள்பதிவாக அமைந்திருப்பதோடு, வரலாற்றில் இருந்து பட்டறிவைப் பெற்றுக்கொள்வதற்கு, நாட்டின் அரசியல் - படைத் தலைவர்கள் தவறியிருப்பதையே உணர்த்தி நிற்கின்றன - என்றுள்ளது. (அ-1)

# கிளிநொச்சி மாவட்டத்திலேயே— இவ்வருடம் அதிகமானோர் இடம்பெயர்வு

கொழும்பு,ஒக். 29

இனமோதல்கள் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகமான மக்கள் இந்த வருடத்தில் இடம்பெயர்ந்து உள்ளனர் என்று அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் அறிவித்துள்ளது.

இடம்பெயர்ந்தோர் தொடர்பாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இந்த விவரம் தெரியவந்துள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது

51,908 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 1,90,669 பேர் இந்த வருடத்தில் இடம்பெயர்ந்திருப்பதாக அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 48,512 பேரும் மட்டக்களப்பு மாவடட்டத்தில் 38,230 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 32,323 பேரும் இடம்பெயர்ந்துள்ளனர் என அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்தவர்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் வேண்டிய உதவிகளை வழங்கி வருகின்றது. (அ-1)

# வாசகர் திருமுகம்

## இரவு வேளைகளில் சட்டவிரோத மின்பாவனையும் கசிப்பு விற்பனையும்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை வீதியில் இரவு வேளைகளில் அங்கு வதியும் பொதுமக்களுக்கு கசிப்புவியாபாரிகளதும் சட்டவிரோத மின் பாவனையாளராலும் மிகவும் சிரமங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இவர்கள் மதுபோதையில் கொட்டவார்த்தைகளால் பொதுமக்களைத் திட்டுவதுடன், பாட்டுப்பாடி மக்களின் இரவுநேர அமைதியைக் கலைத்த வண்ணம் உள்ளனர். தயவு கூர்ந்து இத்தகைய சட்டவிரோத நடவடிக்கையை நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகின்றோம்.

*அச்சுவேலி.* பொதுமகன்.

## பொருள் விநியோகத்தில் மீளவும் பழைய நிலைவருமா?

ஆவணி 10 இல் சங்கக்கடைகள், தனியார் கடைகள் பலவற்றிலும் வேண்டியளவு உணவுப் பொருள்கள் சாதாரண விலையில் பெறக்கூடிய நிலையில் இருந்தன. ஆவணி 11 இல் ஏ-9 வீதி மூடப்பட்டது. ஆவணி 12 இல் அரிசி, மா, சீனி, பருப்பு முதலியன யாவும் எல்லாக் கடைகளில் நின்றும் மாயமாக மறைந்து விட்டன. இந்த பரிதாப நிலையை உணர்ந்து அரசாங்க அதிபரும் உணவுத் திணைக்கள அதிகாரிகளும் ஊக்கமாக உழைத்து உடனடியாக பலநோக்கு கூ.ச.கடைகள் மூலம் பங்கீட்டு அட்டைக்கு ஓரளவேனும் அரிசி, மா, சீனி முதலியன கிடைக்கச் செய்தமைக்காக அவர்களின் சேவையைப் பாராட்டாது இருக்க முடியாது. ஆனால் அது விரைவில் மறைந்து விட்டது.

தனியார் துறையினருக்கு அரச அதிபரின் விலைக்கட்டுப்பாட்டுக்கமைய பொருள்களைக் கொண்டு வர அனுமதி பெற்றுக் கொடுத்தமை ஆரம்பத்தில் பலன் தந்தது. எல்லாப் பொருள்களும் வேண்டியபடி பெறமுடிந்தது. அந்த நன்மை மிக விரைவில் மாறான பலனையே தந்தது. வாக்குறுதி காற்றில் பறந்தது. ஒவ்வெரு தனியார் கடையும் தாம் தாம் நினைத்த மாதிரி பொருள்களின் விலையை நிர்ணயித்து விற்கத் தொடங்கின. அரசாங்க அதிபரின் விலை நிர்ணயமும் பொருள்களின் விலைப்பட்டியல் காட்சியில் வைப்பும் நீதிமன்ற எச்சரிக்கையும் பயன் தருவதாய் இல்லை. கிலோ 40 ரூபாவிற்கு வாங்கிய அரிசி 90, 100, 120 ரூபாவரையும் 60 ரூபா சீனி 200 ரூபா வரையும் 60 ரூபா பருப்பு 200 ரூபா வரையும் உயர்ந்தன. எல்லாப் பொருள்களுக்கும் இதே நிலை தான் ஏற்பட்டது.

அரசாங்க அதிபரும் திணைக்கள அதிகாரிகளும் ஆவணி 11 இன் பின் செயற்பட்டது போல், கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூலம் பங்கீட்டு அட்டைகளுக்கு நியாய விலையில் கிடைக்க கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவித்து தொழிற்படச் செய்வதே மீண்டும் மக்களுக்குப் பயன்படுவதாக இருக்கும். செய்வார்களா? கூட்டுறவுச் சபையினரும் மக்களின் நலன் கருதி முறையாகச் செயற்பட வேண்டும்.

*வல்வெட்டித்துறை.* ஆ. கதிர்காமத்தம்பி

## மருத்துவ ஆலோசனை வழங்கும் நிலையத்தின் சேவை!

மருத்துவ ஆலோசனை நிலையம் ஒன்றில் எனது மாமனாரை அவசர ஆலோசனை பெறும் நிமித்தம் மட்டுப்படுத்தப்பட்ட நோயாளிகளைப் பார்வையிடும் முறிவு, நெரிவு வைத்தியரிடம் ஆலோசனை பெறுவதற்காக 15.08.2007 ஆம் திகதி 10 மணிக்கு பதிவு செய்த போது 17.08.2007 ஆம் திகதி 11 மணிக்கு ஆலோசனை வழங்குவதற்கு அனுமதி கிடைத்தது.

நோயாளியை 2 நாள்கள் வைத்திருக்க முடியாத காரணத்தினால் வைத்தியசாலையில் உரிய மருத்துவ வசதி பெறுவதற்காக அனுமதிக்கப்பட்டது.

15.08.2007 ஆம் திகதி புதன்கிழமை 10 மணிக்கு பதிவு செய்யப்பட்டதை அன்றைய தினம் 2 மணிக்கு பதிவை நீக்குமாறு கேட்டபோது மறுநாள் வருமாறு கூறப்பட்டது. 16.08.2007 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8மணிக்கு சென்றபோது மீண்டும் 10 மணிக்கு வருமாறு கூறப்பட்டது.

ஆலோசனை பெறும் பதிவை நீக்குவதற்கு 68 மணித்தியாலங்கள் போதிய அவகாசம் இருந்தபோதிலும் பதிவை நீக்க மறுத்ததுடன், பலமுறை அலைக்கழிக்கப்பட்டுள்ளது. இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் கடுமையான பண்பற்ற வார்த்தைகளும் பிரயோகிக்கப்பட்டன. இறுதியாக முற்றிலும் முரண்பாடான நிலையில் ரூபா 400 செலுத்தியதற்கு ரூபா 330 திருப்பித் தரப்பட்டுள்ளது (330 ரூபா வழங்கியதை உறுதிப்படுத்தும் சிட்டை பிரதி கைவசமுண்டு).

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களான கணவன், மனைவி இருவரும் அரச உத்தியோக உயர்மட்ட அதிகாரிகளாவர்கள். அவர்களையே இவ்வளவு கஷ்டப்படுத்துபவர்கள் என்றால் சாதாரண பாமர மக்களின் நிலையினை என்னென்பது?

ஒரு பற்றுச்சீட்டு எழுதியதற்கும், கொப்பியில் பெயரை நீக்கியதற்கும் 70 ரூபா தண்டம், சாதாரண மக்களினால் இதனை தாங்கமுடியுமா? இத்துடன் இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் போதிய கால அவகாசம் இருப்பதனால் மருத்துவ ஆலோசனை நிலையத்திற்கு பதிவை நீக்குவதற்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை.

*யாழ்ப்பாணம்.* பொ.குகநாதன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கடல் நீரேரி மீன்பிடியில் முன்னேற்றம் இல்லை

கட்டைவேலி, ஒக்.29

வலி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கடல் நீரேரிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீன்பிடியில் எந்தவித முன்னேற்றமும் இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆவரங்கால் கிழக்கு, புத்தூர் கிழக்கு, அச்சுவேலி தெற்கு ஆகிய பகுதிக் கடல் நீரேரிகளிலேயே இந்த முன்னேற்றம் எதுவும் ஏற் படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்ணளவாக மாதம் ஒன்றுக்கு 400 கிலோ மீன் மட்டுமே பிடிக்கப்படுவதாகப் பிரதேச செயலருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (203-160)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




29.10.2007



**ஜீவன்ராம் அகல்யா தம்பதியரின்**
செல்வப் புதல்விகள்
**ஜீவிஜா, அஸ்விஜா**

தங்களது முதலாவது பிறந்தநாள் விழாவை இன்று (29.10.2007) ரொறன்டோ கனடாவில் உள்ள தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றனர். இவர்களை கனடாவில் வசிக்கும் அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, சித்தப்பாமார், அத்தைமார், சித்தி, மாமா, மச்சி மற்றும் கல்வளைவீதி, சண்டிலிப்பாயில் வசிக்கும் அம்மப்பா (சென்னி), அம்மம்மா (தேவி), மாமாமார்களான நிமல், லவன் (டோகா), ராஜிஸ்ரன், சித்தி குயிலா, அத்தை ஜெயந்தி, மச்சிமாரான பானுஷா, லோஷனா, பாட்டி சின்னப்பிள்ளை மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவர்களைக் கல்வளைப் பிள்ளையார் அருள் பெற்றுச் சீரும் சிறப்புமாகப் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

தகவல்:-
கல்வளை வீதி, **அம்மப்பா, அம்மம்மா,**
சண்டிலிப்பாய். **செல்வநாயகம், இராசமலர்.**

## வீதியில் கொட்டப்படும் கழிவால் சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது

வலி வடக்கு, ஒக்.29

உடுவில் லவ்லேனில் கொட்டப்படும் கழிவு பொருள்களினால் அவ்வீதியால் பொது மக்கள் பயணம் செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இவ்வீதியில் சிகையலங்கரிப்பு நிலையங்களில் இருந்துகொண்டு வந்து போடப் படும் முடியில் இருந்து கோழிகளின் இறகுகள் உட்பட மற்றும் கழிவு பொருள்களும் போடப்பட்டுள் ளன.

இதனால் மழை காலத்தில் இவ்வீதியில் செல்பவர்கள் துர்நாற்ற வாடை தாங்க முடியாது மூக்கைப் பொத்திக் கொண்டு ஒடிச் செல்லும் நிலைமையே காணப்படுகின்றது.

இந்த வீதியை துப்புரவாக வைத்திருப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை உரியவர்கள் எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (203-68)


### நவீனமுறையில் பரு.இலங்கைவங்கி

கட்டைவேலி,ஒக்.29

பருத்தித்துறை இலங்கைவங்கிக் கிளை நவீன முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு வாடிக்கை யாளர்களுக்கு திருப்திகரமாக சேவைகளைவழங்கி வருகிறது.

நவீன முறையின் கீழ் வங்கியின் அனைத்துப் பகுதிகளும் குளி ரூட்டப் பட்டுள்ளன. (203-160)

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலிகள்



செல்வன்
**தருமலிங்கம் பாலச்சந்திரன்**

| மனம்மகிழ | மனம்துவழ |
|---|---|
| 24 . 10 . 1970 | 11.11.1995 |

திதி:- 29.10.2007 (சதுர்த்தி)

அன்புடனும் பண்புடனும் எமை வளர்த்த திருவுருவே!
அணையாத தீபமாய் சுடர்விடும் குலவிளக்கே!
கண்ணிமைக்கும் நேரத்தில் காற்றோடு கலந்தீர்
மண்ணிருக்கும் வரை மனதோடு மலர்ந்திருப்பீர்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*நிரந்தர முகவரி:*
நகுலேஸ்வரா வீதி,
கீரிமலை.
*தற்காலிக முகவரி:*
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (67860)

*உன் நினைவில் வாழும்:-*
**அம்மா, அப்பா,**
**தம்பி, தங்கை,**
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்
30 ★ 06 ★ 1934



ஆண்டவன் அடியில்
29 ★ 09 ★ 2007

**அமரர் தம்பித்துரை மனோன்மணி**

எமது துயரத்தில் பங்கு கொண்டு எமக்கு உற்ற துணையாக நின்ற அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (29.10.2007) திங்கட்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

துர்க்காபுரம், மல்லாகம். (67860) **குடும்பத்தினர்.**

# நெஞ்சகலா முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
**25.05.1948**


**மறைவு**
**29.10.2006**

**திதி: 16.10.2007**

குடும்பத்தின் வேராக நின்று உழைத்தவரே!
ஆலம் விழுது போல் இருக்கும் உறவுகளை எல்லாம்
தவியாய் தவிக்கவிட்டுச் சென்று
ஓராண்டு ஆகியும் ஏற்றிய தீபமாய் எம் நெஞ்சில்
என்றும் அணையாது நீங்கள் இருப்பீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
**மனைவி, பிள்ளைகள்**
**மற்றும் குடும்பத்தினர்.** (மாதகல்).

இல.70, அம்மன் வீதி,
நல்லூர். (சி/54115)



# அமரர் தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்

**(பிஸ்கால் உத்தியோகத்தர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி: 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# போரியல் தீவிரப் போக்கால் மோசமடையும் பொருளாதாரம்

அநுராதபுரம் விமானப்படைத் தளம் மீது விடுதலைப் புலிகளின் கரும்புலி அணி நடத்திய அதிரடிப் பாய்ச்சலினால் அதிர்ந்துபோயிருந்த தென்னிலங்கையை, திடீரென வந்த பால்மா விலை அதிகரிப்புப் பற்றிய அறிவிப்பு மேலும் அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியிருக்கின்றது.

போரியல் வெறிப் போக்கால் நாட்டின் பொருளாதாரத்தை மண்ணாக்கி வருகின்றது இந்த அரசுத் தலைமை. அதன் விபரீத விளைவுகளுக்கு முகம்கொடுத்து, அவற்றை எதிர்கொள்ள வேண்டிய நெருக்குவாரத்துக்குள் - இக்கட்டுக்குள் - தள்ளப்பட்டிருக்கின்றார்கள் பொதுமக்கள்.

ஒரு கிலோ பால்மா பக்கெட்டின் விலை ஒரேயடியாக இருநூறு ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

அடுத்த வாரம் அரசின் வருடாந்த வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. அதற்கு முன்னரே விலை அதிகரிப்பு அறிவிப்புகள் தம்பாட்டில் வந்துகொண்டிருக்கின்றன.

இனி, வரவு - செலவுத் திட்டத்தின் மூலமும் புதிய வரிவிதிப்புகள், விலை அதிகரிப்புகள் தாராளமாக வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒருபுறம் யுத்தத்துக்காகப் பெரும் தொகை நிதி வீண் விரயம் செய்யப்படுகின்றது. மறுபுறம் அதே யுத்தம் பொருளாதார விருத்தியை வீழ்த்தி, வருமானத்தை முடக்கி, பொருளாதார நெருக்கடியை உருவாக்கி நிற்கின்றது. இவற்றுக்கு மத்தியில் புதிய வரிவிதிப்புகள், விலை அதிகரிப்புகள் என்று நாட்டின் மோசமடைந்துவரும் பொருளாதாரச் சுமையை மக்கள் மீது சுமத்துவதைத் தவிர அரசுக்கு வேறு வழியேயில்லை. எனவே, வரவு - செலவுத் திட்டத்தை ஒட்டியும் புதிய விலை அதிகரிப்புகள் வரும் என நம்பிக்கையாக நம்பலாம்.

இதே சமயம்,தொலைத் தொடர்புக் கட்டண (தொலைபேசிக்கட்டண) அதிகரிப்பு, மின்சாரக் கட்டண உயர்வு, எரிபொருள் விலை அதிகரிப்பு என்று பல நிதிச் சுமை அறிவிப்புகள் அடுத்தடுத்துத் தொடர்ந்தும் வெளியாவதற்கு வரிசையாகக் காத்து நிற்கின்றன என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

நல்லாட்சி தவறி, ஊழலும், மோசடியும், லஞ்சமும் அரச நிர்வாகத்துக்குள் புரையோடிப் போயிருக்கின்றமையும் நாட்டின் பொருளாதாரம் இவ்வாறு அதல பாதாளத்துக்குள் வீழ்ந்தமைக்கு மற்றொரு முக்கிய காரணமாகும்.

இவ்வளவு குளறுபடிகளையும் 'புலிகளுக்கு எதிரான யுத்தம்' என்ற ஏமாற்று நாடகத்தின் அரங்குகளினால் மூடி மறைத்துக்கொண்டு ஆட்சி வாகனத்தை ஓட்டுகின்றது அரசுத் தலைமை.

மிகவும் மோசமடைந்துவரும் இந்தப் பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து நாடு எப்படித் தாக்குப் பிடித்துப் பிழைத்து, மீண்டு, தப்பும் என்பதே தென்னிலங்கை அரசியல் விமர்சகர்களின் ஆச்சரியத்துடன் கூடிய வினாவாகவிருக்கின்றது.

கட்டுமட்டில்லாமல் எகிறிவரும் விலைவாசி உயர்வுக்கு முகம் கொடுத்து, குடும்பத்தின் அன்றாடத் தேவைகளையாவது நிறைவு செய்து, எவ்வாறு வாழ்க்கையை ஓட்டுவது என்பது சாதாரண அப்பாவிப் பொதுமகனின் ஒரே வினாவாகவிருக்கின்றது. ஒரு வேளை கூட முழுமையாக உணவு அருந்தும் வசதியில்லாத - 'அன்றாடம் காய்ச்சி' நிலைக்குப் பல குடும்பங்கள் வந்துவிட்டன.

விலைவாசி அதிகரிப்புச் சுமையால் சமூகம் தடுமாறுகிறது என்றால், மறுபுறம் அதிகார நிர்வாகத் தவறுகளில் அதிருப்தி கொண்டுள்ள நாட்டு மக்கள் - குறிப்பாகத் தென்னிலங்கை மக்கள் - இந்த அரசுக்கு எதிராகத் தமது எரிச்சலை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டார்கள்.

நாடளாவிய ரீதியில் ஆசிரியர்கள், அதிபர்கள் இன்றும் நாளையும் வேலைநிறுத்தத்தில் குதிக்கின்றார்கள். இதனால் அரச பாடசாலைகள் முற்றாகச் செயல் இழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனினும் இந்த வேலை நிறுத்தத்தில் தமிழர் சார்பு ஆசிரியர் தொழிற்சங்கங்கள் சம்பந்தப்படாததால், இந்த வேலைநிறுத்தத்தின் நேரடிப் பாதிப்பு வடக்கு, கிழக்கில் அநேகமாகக் குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

இதேசமயம், சுகாதார சேவைத் தொழிற்சங்கங்கள் நாளை மீண்டும் ஒருநாள் வேலைநிறுத்தத்தில் குதிக்கவுள்ளன.

அதேவேளை, மின்சாரசபை உட்பட பல அத்தியாவசியத் துறைத் தொழிற் சங்கங்களும் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்துக்குத் தயாராகி வருகின்றன.

ஆட்சி, அதிகாரக் கையாள்கை தவறியதால் விலைவாசி அதிகரிப்பு, வாழ்க்கைச் சுமை உயர்வு, பண வீக்கம், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி என்று நாட்டின் பொருளாதாரத்தின் ஒவ்வொரு அடிப்படை அங்கங்களும் வரிசையாகத் தளர்ந்து வருகின்றன.

தற்போதைய அரசின் யுத்தத் தீவிரப் போக்கு பல மோசமான பின்னடைவுகளையும், விளைவுகளையும் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படுத்தி வருவது அப்பட்டமாகப் புலப்படுகின்றது.

நாட்டுக்குப் பெரும் வருமானம் ஈட்டித்தரும் உல்லாசப் பயணத்துறை, போர் விபரீதங்களால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. உல்லாசப் பயணிகளின் வருகை ஏற்கனவே சுமார் இருபது வீதத்திலும் அதிகமாக வீழ்ச்சியடைந்துள்ளது. யால வனச் சரணாலயம் மற்றும் அநுராதபுர விமானப்படைத்தளம் ஆகியவை மீதான புலிகளின் வெற்றிகரத் தாக்குதல்கள் இந்தத் துறையை மேலும் மோசமாகப் பாதிக்கும் சூழ்நிலை தென்படுகிறது.

மொத்தத்தில் நாட்டின் பொருளாதாரம் கட்டையில் ஏறிப்படுக்கப்போகின்றது என்பது மெல்ல மெல்ல நிச்சயமாகி வருகின்றது.

இந்த மோசமான நிலைமைக்கு அரசை வழிப்படுத்திய 'ராஜபக்ஷ சகோதரர்கள் அண்ட் கம்பனியே பொறுப்பேற்க வேண்டியிருக்கும்.

# குடாக்கடலில் தொழில் செய்வதற்கு படையினர் நேற்று முதல் அனுமதி

## ஒரு கிலோ மீற்றர் தூரம் என்ற நிபந்தனையுடன்

யாழ்ப்பாணம்,ஒக்.29

குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை மீனவர்கள் யாழ்.குடாக்கடலில் தொழில் செய்வதற்கு நேற்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் அவர்கள் ஒரு கிலோ மீற்றர் வரை மட்டுமே மீன்பிடிக்க முடியும் என்ற நிபந்தனையுடனேயே இந்த அனுமதியை படையினர் வழங்கியிருப்பதாக மீனவர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை மீனவர் சங்கங்கள் படையதிகாரிகளுடன் மேற்கொண்ட கலந்துரையாடலைத் தொடர்ந்து பின்வரும் நிபந்தனையுடன் இக்கடற்பரப்பில் மீன்பிடிக்க படையினர் அனுமதி வழங்கியதாகவும் இதற்கமைய நேற்று இக்கடற்பரப்பில் சென்று மீனவர்கள் தொழில் செய்து திரும்பியதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

* குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை மீனவர்கள் தத்தமது மீன்பிடி இறங்குதுறைகளிலிருந்து யாழ்.குடாக்கடலில் ஒரு கிலோ மீற்றர் வரை மட்டுமே சென்று மீன்பிடிக்க முடியும்.

இத்தூரம் முன்னர் இரண்டு கிலோ மீற்றராக இருந்து பின்னர் மூன்று கிலோ மீற்றராக அதிகரிக்கப்பட்டு பின்னர் ஒன்றரைக் கிலோ மீற்றராக குறைக்கப்பட்டு தற்போது ஒரு கிலோ மீற்றராகக் குறைக்கப்பட்டுள்ளது.

* குருநகர் மீனவர்கள் 200 பேரும், பாஷையூர் மீனவர்கள் 100 பேரும், கொழும்புத்துறை மீனவர்கள் 50 பேரும் என்ற எண்ணிக்கையில் மட்டுமே இக்கடற்பரப்பில் நாளாந்தம் மீன்பிடிக்கமுடியும்.

முன்னர் சுமார் 700 பேருக்கு தொழில் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ள கடல் எல்லை மீன்பிடிக்க போதுமானதாக இல்லை எனவும், மீனவர்கள் பலரின் உபகரணங்கள் (வலைகள்) இப்போது அனுமதிக்கப்பட்ட ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ளது எனவும் தெரிவித்தனர்.

அங்கு போகாதபடி கரையிலிருந்து படையினர் தங்களைக் கண்காணித்துக் கொண்டிருந்ததாகவும் நேற்று மீன்பிடிக்கச் சென்று திரும்பிய குருநகர் மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

குடாக்கடற்பகுதியில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற கடற்புலிகள் - படையினர் மோதலைத் தொடர்ந்து, மறுதினம் 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் இக்கடற்பரப்பில் மீன்பிடிப்பதை படையினர் தடை செய்திருந்தமை தெரிந்ததே. (அ-51)

# யால, அ'புரத் தாக்குதல்களைக் கண்டித்து ஆளும் கூட்டமைப்புக் கட்சிகள் தீர்மானம்

கொழும்பு,ஒக்.29

யால, அநுராதபுரம் தாக்குதல்களைக் கண்டித்து ஆளும் கூட்டமைப்புக் கட்சிகள் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றன.

இந்தத் தீர்மானத்தையொட்டிய அறிக்கையில் ஈ.பி.டி.பி. சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், மலையக மக்கள் முன்னணி சார்பாக அமைச்சர் பெ.சந்திரசேகரனும் கையெழுத்திட்டுள்ளனர்.

ஆனால், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் எவரும் கையெழுத்திடவில்லை. அக்கட்சி அமைச்சுப் பதவியை ஏற்று அரசில் இடம்பெற்றுள்ள போதிலும், மேற்படி தாக்குதல்களைக் கண்டிக்கும் தீர்மானத்தில் ஏனோ சம்பந்தப்படவில்லை.

அந்தத் தீர்மானத்தில் ஒப்பமிட்டுள்ள கட்சித் தலைவர்களின் விவரங்கள் வருமாறு:-

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன (ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி), அமைச்சர் டீ.எம்.ஜயரத்ன (பொதுஜன ஐக்கிய முன்னணி), அமைச்சர் சுசில் பிரேமஜயந்த (ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு), அமைச்சர் எம்.எச்.முஹம்மத் (ஐக்கிய தேசியக் கட்சி ஜனநாயக முன்னணி), அமைச்சர் தினேஷ் குணவர்த்தன (மக்கள் ஐக்கிய முன்னணி), விமலசிறி டீ.மெல் (லங்கா சமசமாஜக் கட்சி), அமைச்சர் ரவூப் ஹக்கீம் (ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்), அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா (ஈழமக்கள் ஜனநாயக முன்னணி), அமைச்சர் பி.சந்திரசேகரன் (மலையக மக்கள் முன்னணி), அமைச்சர் பேரியல் அஷ்ரப் (தேசிய ஐக்கிய முன்னணி), அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா (தேசிய காங்கிரஸ்), அமைச்சர் டியூ குணசேகர (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி), அமைச்சர் ரிஷாத் பதியுதீன் (அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்), வண. எல்லாவல மேதானந்த தேரர் (ஜாதிக ஹெல உறுமய), ரஞ்சித் நவரத்ன (இலங்கை மக்கள் கட்சி), பீ.எம். பொடி அப்புஹாமி (தேச விமுக்தி ஜனதா பெரமுன) - ஆகியோராவர்.

அந்தத் தீர்மானத்தின் விவரம் வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பயங்கரவாதிகளின் சகல முகாம்களையும் நிர்மூலமாக்கி மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையில், சின்னாபின்னமாகி தனிமைப்படுத்தப்பட்ட புலிகள் இயக்கத்தின் சிறு குழுவொன்று யால சரணாலய பூமியில் இராணுவத்தினர் தங்கியிருந்த வீட்டின் மீது தாக்குதல் நடத்தி இராணுவச் சிப்பாய்கள் சிலரைப் படுகொலை செய்தமையையும், அநுராதபுரம் விமானப்படை முகாம் மீது மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலையும் பெரிதும் கண்டித்து ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.

### பயங்கரவாதத்தை நிபந்தனையின்றி தோல்வி அடையச் செய்யவேண்டும்

இந்தப் பயந்தாங்கொள்ளி பயங்கரவாதத் தாக்குதலுக்கு மத்தியில் இலங்கையின் இறைமைக்காக தமது இன்னுயிரை அர்ப்பணித்த இராணுவச் சிப்பாய்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர்வதும், நமது சிப்பாய்கள் விரைவில் குணமடைவதற்காகப் பிரார்த்திப்பதும் அவ்வனைத்து உயரிய குடும்பங்களுக்கும் தேசத்தின் கௌரவத்தைத் தெரிவிப்பதும் தேசிய கடப்பாடென்பது எமது நம்பிக்கையாகும்.

கொடிய பயங்கரவாதத்தை நிபந்தனையின்றி தோல்வியடையச்செய்து இந்நாட்டில் தமிழ்மொழி பேசும் மக்களின் நியாயமான மனக்குறைகளுக்காக கூருணர்திறம் காண்பிப்பதும், அத்தகைய குறிக்கோள்களுக்காக அவர்களை மென்மேலும் ஆட்சியுடன் தொடர்புபடுத்திக்கொள்வதற்கான அரசியல் கலாசாரமொன்றை உருவாக்குவதும் அரசின் முக்கிய கடமையாகும்.

அவ்வாறே குறித்த அரசியல் தீர்வுக்கான செயன்முறையை யதார்த்த பூர்வமானதாக மாற்றியமைப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்பட்ட துணிகரமான தலைமைத்துவத்தை மதிப்பிடுவதற்கும் இதனை நல்லதொரு தருணமாகக் கருதுகின்றோம்.

### குறுகிய அரசியல் லாபங்களைத் தேடுவதைத் தவிர்க்கவும்

அவ்வாறே, முழுத் தேசமும் பிரச்சினையில் சிக்கிய ஒரு காலகட்டத்தில் குறுகிய அரசியல் இலாபங்களை நாடுவதை நாம் ஒருபோதும் அனுமதிக்கமுடியாது, குறிப்பாக, தெற்கின் அரசியலைப் புலிகளுக்கு பொருத்தமானவாறு இணக்குவிப்பதற்காக யாரெல்லாம் முயற்சிக்கின்றார்களாயினும், நாட்டுப் பிரஜைகள் அனைவரும் தனித்த குரலில், திடசங்கற்பத்துடன் அதனை மறுதலிக்கவேண்டுமென்பதையும் நாம் பெரிதும் வலியுறுத்தவேண்டியுள்ளது.

ஒன்றிணைதல், எதிர்பார்ப்புகள், பிரிதல், எதிர்பார்ப்புகள் சிதைவடைதல் ஆகியவற்றின் மத்தியில் பௌத்தம், கிறிஸ்தவம், இந்துமதம், இஸ்லாம் ஆகிய சகல மத தாபகர்களினதும் உயரிய எண்ணங்களுக்கு இலங்கை மற்றும் உலக அனுபவங்களின் ஊடாக நாம் மீண்டும் ஒருதடவை பூரண கௌரவமளிக்கின்றோம்.

வீரமிக்க எமது படைச் சிப்பாய்களுக்குமுகம்கொடுக்க முடியாமல் ஒரு பிரதேசத்தில் மாத்திரம் சிக்கிக்கொண்டிருக்கும் புலிப் பயங்கரவாதிகள் தமது தற்கொலைக் குண்டுதாரிகள் மூலம் இவ்வாறான மேலும் பல தாக்குதல்களையும் பொதுமக்கள் படுகொலைகளையும் மேற்கொள்வதற்குத் திட்டமிடலாம். எனவே, அது பற்றியும் அவதானத்துடன் இருக்குமாறு பாதுகாப்புப் படையின் அனைத்துப் பிரிவினரையும், பொதுமக்களையும் கூட்டாக வேண்டிக்கொள்கின்றோம். - என்றுள்ளது. (சி)

# ஆஸ்துமா நோய்க்குச் சிகிச்சை பெறுங்கள்...

ஆஸ்துமா, தொய்வு வருத்தம், முட்டுவருத்தம் எனப் பல பெயர்களால் எம் மத்தியில் அறியப்பட்டிருக்கும் ஆஸ்துமா எனும் சுவாச நோய் பற்றிய அடிப்படை விடயங்களைச் சகல மக்களும் அறியும் வகையில் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆஸ்துமா நோய் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வது ஆஸ்துமாவுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கவும் அந்நோய் நிலைமையை இலகுவாகக் கையாளவும் முடிகிறது.

2006ஆம் ஆண்டில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதி பெற்ற நோயாளர்களின் புள்ளிவிவரங்களின்படி மிகக் கூடுதலான நோயாளர்கள் ஆஸ்துமா நோய்த் தாக்கத்தின் காரணமாகவே வைத்தியசாலை விடுதிகளில் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். 1444 ஆண்களும் 1842 பெண்களுமாக மொத்தமாக 3286 நோயாளர்கள் ஆஸ்துமாவிற்காகச் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். இத்தகவல்கள் செப்ரெம்பர் மாதம் 2007 யாழ். மருத்துவ சங்கம் JMA News இதழில் வெளியிடப்பட்டுள்ளன.

உலக சுகாதார நிறுவனத்தின் தகவல்களின்படி உலகிலே 300 மில்லியன் மக்கள் ஆஸ்துமா நோயுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் அரைவாசிப் பேருக்கு மேல் ஆஸ்துமா நோய்த்தாக்கம் காரணமாக ஏதோஒரு வகையில் தமது நாளாந்த வாழ்க்கை முறையில் குழப்பமடைகிறார்கள். இலங்கையிலும் ஆஸ்துமாவின் தாக்கம் ஏற்படும் சந்தர்ப்பங்களும் குறிப்பிடக்கூடியளவு அதிகரித்துள்ளது. மிக அண்மையில் இலங்கையில் சுவாச நோய்கள் பற்றி ஆராயும் நிபுணர் குழுவினது (Respiratory Disease Study Group of Srilanka) அறிக்கைகள் இதற்குச் சான்று பகரும்.

ஆஸ்துமா பற்றிய மேலதிகத் தகவல்களைப் பெறுவதற்கும் உங்களுடைய ஆஸ்துமா நோய் பற்றி யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் 04.11.2007 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கில் கலந்துகொள்ளவும்.
(சமுதாய மருத்துவத்துறை, மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 13 | செவ்வாய்க்கிழமை 30.10.2007 |
| திதி : பஞ்சமி | பின்னிரவு: 12.13 |
| நட்சத்திரம் : | மிருகசீரிடம் |
| [illegible] | [illegible] 01.51 |
| [illegible] | : 10.33 - 12.03 |
| ராகுகாலம் | : 03.03 - 04.33 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுராதபுரத்தில் தாக்குதல் நடத்திய புலிகளில் சிலர் தப்பிச் சென்றனரா?

## குற்றப் புலனாய்வுப் பிரிவினர் துருவுகின்றனர்

கொழும்பு,ஒக்.29

கடந்த திங்கட்கிழமை அதிகாலை அநுராதபுரம் விமானப்படைத் தளத்திற்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகளின் அணியில் இடம்பெற்றிருந்த சிலர் பின்னர் அங்கிருந்து பாதுகாப்பாகத் தப்பிச் சென்றனரா?

இது குறித்தும், சம்பந்தப்பட்ட தாக்குதலை விசாரிக்கும் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் துருவத் தொடங்கியிருக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாக்குதல் நடத்தவந்த புலிகளின் அணியில் 27 பேர்வரை இடம்பெற்றிருக்கலாம் எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நம்புவதற்கு இடமிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அநுராதபுரத் தாக்குதல் இடம்பெற்ற பின்னர் அன்று காலை கொழும்பில் செய்தியாளர் மாநாட்டைக் கூட்டிய பாதுகாப்புத் துறைப் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, புலிகளின் இருபது சடலங்கள் அநுராதபுரத் தளத்திலிருந்து கண்டுபிடிக்கப் பட்டுள்ளன என்று அறிவித்தார்.

அதற்கு இரண்டு மணிநேரம் கழித்தே, மேற்படி தாக்குதலில் 21 கரும்புலிகள் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கும் செய்தியையும், 21 கரும்புலிகளுடன் தலைவர் பிரபாகரன் முன்னர் எடுத்துக்கொண்ட படத்தையும் 'தமிழ் நெற்' இணையத்தளம் வெளியிட்டது.

அந்தப் படத்தில் கூட ஒரு கோடியில் (கரையில்) நின்ற கரும்புலி ஒருவரின் படம் நாசூக்காக வெட்டி ஒதுக்கப்பட்டிருக்கின்றமை தெரிகின்றது. இப்படி ஓரிருவர் அந்தப் படத்திலிருந்து ஒதுக்கப்பட்ட பின்னர் அந்தப் படம் வெளியிடப்பட்டிருக்கலாம்.

அதேசமயம் இந்த வான் படைத்தளம் உள்ள பிரதேசத்தைச் சேர்ந்த கிராமவாசிகள் அன்று விடியும் வேளையில் - காலை 5 மணியளவில் - இருவேறு இடைவெளி நேரத்தில் - இரண்டு குழுக்களாகத் தலா மூன்று பேரென மொத்தம் அறுவர் அங்கிருந்து வெளியேறிச் செல்வதை அவதானித்திருக்கின்றனர்.

இவற்றை நோக்கும்போது குறைந்த பட்சம் 27 பேராவது இந்தத் தாக்குதலில் ஈடுபட்டிருக்கலாம் என்றும் -

அவர்களில் ஆறு அல்லது ஏழு பேர் வரை அங்கிருந்து தப்பிச் சென்றிருக்கலாம் என்றும் - ஊகிக்க முடிகின்றது.

- இவ்வாறு தென்னிலங்கைச் செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன. (சி)

## மணலாறில் சிப்பாய் பலி

மணலாறுப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று படைத்தரப்பினால் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதிக்குள் விடுதலைப் புலிகளின் அணி ஒன்று ஊடுருவித் தாக்குதல் தொடுத்த வேளையிலேயே இந்த மோதல் வெடித்தது என்றும், படையினர் நடத்திய பதில் தாக்குதலில் புலிகளின் உறுப்பினர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்றும் மேலும் கூறப்பட்டது. (சி)

## சென்னையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''சர்வதேச நெறிமுறைகளுக்கு எதிராக மனித சமூகத்தையே வெட்கித் தலைகுனியச் செய்துள்ள வெட்கக்கேடான செயலுக்கு இந்திய அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டும். தமிழக முதல்வரும் இதனை மத்திய அரசுக்கு வலியுறுத்திக் கூறவேண்டும். இல்லாதுவிடின் இந்தியாவும் இலங்கை அரசின் இத்தகைய செயல்களுக்குத் துணைபோகின்றது என்ற முடிவுக்கு தமிழகத் தமிழர்கள் வரத்தலைப்படுவர் - என கௌத்தூர் மணி குறிப்பிட்டிருக்கிறார். (சி)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் இவ்வளவு தூரம் வளரமுடிந்துள்ளது.

இன்று நாம் இனப்பிரச்சினையை தீர்ப்பது குறித்து ஒரு தீர்வுக்கு வந்துள்ளோம். அதனை நாம் முன்னெடுக்கும்போது எதிரணியினர் அதற்கு ஒத்துழைப்புத் தர மறுக்கின்றனர். இத்தகைய நிலை காரணமாகவே நாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றோம்.

குடுமிமலையில் நாம் பெற்ற வெற்றிகளைக் கூட இவர்கள் நகைப்புக்கிடமாக்கினர். நாம் கப்பல்களை நிர்மூலம் செய்துள்ளோம் என்றால் அதனையும் விமர்சிக்கின்றனர்.

இன்று அநுராதபுரம் விமானப்படைத் தளத்தில் நடைபெற்ற தாக்குதல் குறித்து பல்வேறு விமர்சனங்கள் செய்யப்படுகின்றன. இவை குறித்த உண்மை நிலையை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும்.

1998ஆம் ஆண்டு காலத்திலேயே விடுதலைப் புலிகள் தமது விமானப் படையை ஆரம்பிக்க முயன்றனர். 2004 ஆம் ஆண்டு வரையும் அவர்கள் இதற்கான திட்டமிடல் பணிகளில் ஈடுபட்டனர்.

ஆனால், அன்று ஆட்சியில் இருந்தவர்கள் இதனைக் கருத்தில் கொள்ளவில்லை. 2005ஆம் ஆண்டு நாம் ஆட்சிக்கு வந்த பின்னரே இது விடயத்தில் கவனம் செலுத்தினோம். தற்போதுதான் விமானப்படையினர் சக்திமிக்கவர்களாக்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரத் தளம் தாக்கப்பட்டபோது, அங்கு வந்த புலிகளின் விமானங்களை ஏன் விமானப்படையினர் தாக்கியழிக்கவில்லை என எதிரணியினர் இப்போது கேள்வி எழுப்புகின்றனர்.

இது குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டியது எமது கடமையாகும்.

அன்றைய தினம் நாம் யாரும் எதிர்பார்க்காத வகையில் - தூரதிஷ்ட வசமாக எமது எதிர்ப்பு விமானம் ஒன்று சூட்டுக்கு இலக்காகியது. வேறு பிரதேசத்தில் இருந்து அங்கு செல்வதற்கான இயற்கைக் கால நிலை இல்லாமல் இருந்ததும் கவலைக்குரியது. இருப்பினும் இதுபோன்ற எந்தவொரு தாக்குதல் சம்பவத்தையும் இனி முறியடிக்கும் நிலையிலேயே எமது விமானப்படையினர் உள்ளனர். (அ-சி)

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைத்தரப்பில் கூறப்பட்டது.

எனினும், இந்த மோதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை.

இதேவேளை -

வரணிப் பகுதியில் நேற்றுமுன்தினம் முற்பகல் 4.45 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கடும் துப்பாக்கிப் பிரயோகத்தில் படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் மேலும் ஒரு சிப்பாய் காயமடைந்துள்ளார் என்றும் படைத்தரப்பினால் கூறப்பட்டது.

காயமடைந்த படைச்சிப்பாய் பலாலி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க் கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.(சி)

## அ' புரத்தில் மொத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழப்புகளை, இப்போது அநுராதபுரத்தில் ஏற்பட்டுள்ள இழப்புகளுடன் ஒப்பிட்டால் உண்மையில் விமானப்படைக்கு அநுராதபுரத்தில்தான் சேதங்கள், இழப்புகள் அதிகம்.

கட்டுநாயக்காவில் இடம்பெற்ற தாக்குதலின்போது - மிக ஆபத்தான இடமான - விமானங்கள் தரிக்கு நிலையத்துக்குள் (Hangar) புலிகளினால் முற்றாக உள்நுழைய முடியவில்லை. அவர்கள் விமான ஓடுதளப் பாதையில் தரித்து நின்றே, அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த விமானங்களைத் தாக்கியழித்தனர்.

ஆனால், அநுராதபுரத்தில் விமானத் தரிப்பு நிலையத்துக்குள் புலிகள் முற்றாக உள்நுழைந்து சேதங்களை ஏற்படுத்தியிருக்கின்றார்கள் என்பது வெளிப்படையானது.

அநுராதபுரம் தாக்குதலின்போது, அச்சமயம் வான்கலங்கள் தரிப்பு நிலையிலிருந்து எட்டாத தொலைவில் நிறுத்தப்பட்டிருந்த 'எம்.ஐ.-17' ரக ஹெலிக்கொப்டர்கள் மூன்று மட்டுமே அங்கு தப்பிப் பிழைத்திருக்கின்றன.

அநுராதபுரம் தாக்குதலில் ஏற்பட்ட சேதங்களின் மதிப்பு - சேதமுற்ற அல்லது அழிந்த வான்கலங்களின் கொள்வனவுப் பெறுமதியின்படி - முந்நூறு கோடி ரூபாவுக்கு அதிகமாகும். ஆனாலும் இவற்றுக்காகப் புதியவற்றைப் பெற்றுக்கொள்வது இன்னும் அதிக செலவை ஏற்படுத்தும். ஏற்கனவே, இந்த வான்கலங்களின் விலைகள் உலகச் சந்தையில் அதிகரித்துள்ளன. அதேசமயம் டொலருக்கு எதிரான ரூபாவின் மதிப்பு பெருமளவு வீழ்ச்சிகண்டுள்ளது. ஆகையினால் சேதமுற்ற அல்லது அழிந்த வான்கலங்களை மாற்றீடு செய்வது மேலும் அதிக செலவையே தரும்.

### அழிவுற்ற வான்கலங்கள்

**விமானத் தரிப்பு நிலையத்துக்குள் முற்றாக அழிக்கப்பட்ட வான்கலங்கள்:-**

* ஆளில்லா உளவு வானூர்திகள் - இரண்டு. (இவை புத்தம் புதியவை. விமானப்படையின் வான்கல அணிக்குள் இனித்தான் உள்வாங்கப்படவிருந்தவை);
* மிக் - 17 ஹெலி - ஒன்று. (முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது).
* சீனத் தயாரிப்பு 'பி.ரி.-6' ரக பயிற்சி வழங்கல் விமானங்கள் - நான்கு.

**விமான ஓடுதளத்துக்கு அண்மையில் (விமானத் தரிப்பு நிலையத்துக்கு வெளியே) முற்றாக அழிக்கப்பட்ட வான்கலங்கள்:**

* அமெரிக்கத் தயாரிப்பு 'பீச் கிறாவ்ட் 200' - ஒன்று. (மிக விலையுயர்ந்த - நவீன - உளவறி கருவிகள் பொருத்தப்பட்டிருந்த நிலையில் அழிந்துள்ளது).
* சீனத் தயாரிப்பான 'கே-8' ரக இடைத் தரப் பயிற்சி வழங்கல் ஜெற் விமானம் - 1.
* 'மிக-24' ரக தாக்குதல் ஹெலிக் கொப்டர் - ஒன்று.

விமானத் தரிப்பு நிலையத்துக்குள் சேதமடைந்த வான் கலங்கள்.

* ஆளில்லா உளவு விமானம் - 1.
* சீனத் தயாரிப்பு 'பி.ரி.-6' ரக பயிற்சி வழங்கல் விமானங்கள் - மூன்று.
* சீனத் தயாரிப்பான 'கே-8' ரக இடைத்தரப் பயிற்சி வழங்கல் ஜெற் விமானங்கள் - ஐந்து.
* மீள் சேவைக்கு உட்படுத்தமுடியாத சியாமாச்செட்டி குண்டு வீச்சு விமானங்கள் - நான்கு.

விமான ஓடு பாதையை ஒட்டி சேதமாக்கப்பட்ட வான்கலம்:-

* 'மிக-24' தாக்குதல் ஹெலி - ஒன்று. (உ)

## மூன்று வேறு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

.படையினரின் நடவடிக்கையில் பல வாரங்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

இந்த ரக விமானங்களைக் கொள்வனவு செய்ய விமானப்படைத் தலைமை ஆராய்ந்து வருகிறது.

விடுதலைப் புலிகளின் உடல்களை உடைகளைக் களைந்து காட்சிக்கு வைக்கவில்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்திருந்தார். ஆனால் மஹிந்த ராஜபக்ஷ விசாரணைகளுக்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார். எனவே பேச்சாளரின் பொய் அம்பலமாகியுள்ளது.

எனவே இராணுவப் பேச்சாளரை நீக்கிவிட்டு புதிய வரை நியமிப்பது தொடர்பாக உயர் அதிகாரிகள் சிந்திப்பது புத்திசாலித்தனமானது. ஊடகத்துறையினருடான அவரின் மோசமான நடவடிக்கைகள் படையினரினதும் நாட்டினதும் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் மீதான குற்றச்சாட்டுக்கள் வெட்கக்கேடானவை. இதன் மூலம் படையினரின் பெயரை உதய நாணயக்கார களங்கப்படுத்தி உள்ளார். படைத்துறைப் பேச்சாளருக்கு ஊடகவியலாளரைக் கையாள்வதில் திறமை வேண்டும் - என்றுள்ளது. (அ-1)

## புலிகளால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரையில் அம்பாறை மற்றும் அம்பாந்தோட்டைப் பகுதிகளில் படையினர் பயணித்த 15 வாகனங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதில் படையினருக்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

எனினும், இத் தாக்குதல்கள் தொடர்பிலான தகவல்களை படையினர் முற்றாகத் தணிக்கை செய்துள்ளனர். யால சரணாலயப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்கள், திஸ்ஸமகாராம வீரவில பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்களால் அரசு வெளிநாட்டு வருமானங்களை இழந்துள்ளது. சுற்றுலா விடுதிகள் மூடப்பட்டுள்ளன. பலர் வேலைவாய்ப்புகளை இழந்துள்ளனர். இதனால் இப்பகுதிகள் முழுவதும் வெறிச்சோடிக் காணப்படுகின்றன்.

மஹிந்த ராஜபக்ஷ கிழக்கு மற்றும் வடக்கு நோக்கி யுத்த முன்னெடுப்புகளை மேற்கொள்ளமுடியும் என்றால் புலிகளாலும் தென்னிலங்கை நோக்கிக் களமுனைகளைத் திறக்க முடியும் என்பதற்கு இவை சான்றாகும் - என்றார் தளபதி ராம். (க-9)

## மரண அறிவித்தல்கள்

### இரத்தினபூபதி சிவசுப்பிரமணியம்

காரைநகர், வளுப்போடையை பிறப்பிடமாகவும், விளானையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினபூபதி சிவசுப்பிரமணியம் நேற்று(28.10.2007) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் உருத்திரன், கமலேஸ்வரி, யோகேஸ்வரி, செல்வராணி (ஆசிரியை, சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம், காரைநகர்), பாலகிருஷ்ணன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும் கார்த்திகேசு, சிவ்ராசா, சோமசேகரம், பத்மாவதி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சந்திரவதனா, சசிகலா, டிலானி, வினுஜா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (29.10.2007) திங்கட்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### அப்புத்துரை குகானந்தராசா



காரைநகர், அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் வெள்ளாந்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை குகானந்தராஜா அவர்கள் (20.10.2007) அன்று டோகா-கட்டாரில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் அம்பலவாணர் குணராசாவின் பெறா மகனும் சிவஞானம் - மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும் தனலஷ்சுமியின்(யாழ்.போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும் அருள்ராஜ், செல்சியா, அஸ்வினி, அஞ்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் குகவேணி(வைத்தியர், ஆரையம்பதி வைத்தியசாலை, மட்டக்களப்பு) குகதாசன், குகநேசன், வசந்தராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இராமலிங்கம், கஸ்தூரி, ரத்னேஸ்வரி, லோகேஸ்வரன், சிவனேஸ்வரன், விஜயலஷ்மி ஆகியோரின் மைத்துனரும் அஞ்சுகன், தர்ஷிகன், லக்ஷனா ஆகியோரின் அன்பு மாமனாரும் மயூரி, ஹேமராஜ், மகிழ்ராஜ் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் துவாரகன், சாம்பவி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நாளை (30.10.2007) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தனலஷ்மி(மனைவி)
0775292157,
குகவேணி(சகோதரி)
065 2247176,
அ.குகநேசன்(சகோதரன்),
வட்டுக்கோட்டை. (67394)

தகவல்:
அ.குகதாசன்(சகோதரன்)
WESTERN POLY CLINIC
No.40, Haig Road, Bambalapiriya
Colombo 04
T.P:-0112501827, 0779604300

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.